நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 19 சனிக்கிழமை (04-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 280

# வடக்கு பிரதேசக் கடற்பரப்பில் படகுகள் செல்வதற்குத் தடை!

## ஜனாதிபதி டி.பி. பிரகடனம்

கொழும்பு, செப்டெம்பர் 4

வடக்குப் பிரதேசக் கடற்பரப்பில் வள்ளங்கள் மற்றும் படகுகள் செல்வதற்கு இலங்கை அரசு தடைவிதித்திருக்கிறது.

பொதுசனப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இதற்கான பிரகடனத்தை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வெளியிட்டிருக்கிறார்.

மேற்குக் கரையோரத்தில் மன்னார் நகரின் வட பகுதியில் இருந்து கிழக்குக் கரையோரத்தில் திருகோணமலை நகர் வரையிலான கடற் பிராந்தியத்திலேயே வள்ளங்கள் மற்றும் கப்பல்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தடை உத்தரவு வியாழக்கிழமை நள்ளிரவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் சிமெந்து ஆலைக்கு டிசம்பர் மாதத்தில் மூடுவிழா

### ஊழியருக்கு நஷ்டஈடு கிடைக்கும்

யாழ்ப்பாணம், செப். 4

காங்கேசன்துறை சிமெந்து ஆலையை எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் மூடிவிடவும் —

வேலை இழக்கும் ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும்— சிமெந்து கூட்டுத் தாபன தலைமை அலுவலகம் ஏற்பாடுகள் செய்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வேலை இழக்கும் 850 க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கைதாவோர் "முகமூடி" முன் ஆஜர்!

### தமிழ் இளைஞர்கள் பீதி

யாழ்ப்பாணம், செப். 4

கொழும்பில் கைதாகும் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு "முகமூடி"களின் முன்னால் ஆஜர் செய்யப்படுகின்றனர்.

இதனால் தமிழர்கள் பெரும் பீதியுடனேயே நடமாடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"லொட்ஜு"கள், வீடுகள் மற்றும் விடுதிகளில் இருந்து பொலிஸாரால் கைது செய்யப்படும் இளைஞர்கள் பொலிஸ் நிலையத்தில் முகமூடிக்கு முன் நிறுத்தப்படுவதாகவும் —

முகமூடி தலையாட்டும் இளைஞர்கள் தடுத்துவைக்கப்படுவதாகவும் —

ஏனையோர் விடுதலை செய்யப்படுவதாகவும் — கொழும்பில் பொலிஸாரிடம் பிடிபட்டு விடுதலையான ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதியும் தமிழர்களே கடுதலாக பொலிஸாரால் கைது செய்யப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## 25 தமிழர் நேற்றுக் கைது

கொழும்பு, செப். 4

இருபத்தியைந்து தமிழ் இளைஞர்கள் நேற்று கொழும்பில் கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இதேவேளை —

கொழும்பு நகரிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக தேடுதலில் ஈடுபட்டு வருவதாகவும் —

சந்தேகத்திற்குரியவர்கள்— குறிப்பாக தமிழர்கள்—கைது செய்யப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-8)

## ஈழ அகதிகளை அனுப்புவது இடைநிறுத்தம்

கொழும்பு, செப். 4

தமிழகத்தில் இருந்து ஈழ அகதிகளை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதமே அகதிகளை அழைத்துவரும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## 8 ஆயிரம் பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, செப். 4

அரசியல் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் எட்டாயிரம் பேர் கடந்த ஐந்து மாதங்களில் மீண்டும் இலங்கைக்கு திரும்பியுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் நாட்டில் இருந்து இரண்டு லட்சத்து 30 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (உ-8-6)

## கடற் பகுதியை நோக்கி படையினர் ஷெல் தாக்கு

### குருநகர் மீனவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 4

பூநகரி- கல்முனையில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று மாலை 6.30 மணியளவில் கடற் பிராந்தியத்தை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

மண்டைதீவுக்கு கல்முனைப் பகுதிக்கும் இடையிலுள்ள சிறுதீவுக் கூட்டங்களில் ஒன்றான மாண்தீவை நோக்கியே ஷெல் வீச்சு நடத்தப்பட்டது. அப்பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டது.

ஷெல் வீச்சுக்கு இலக்காகி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிதாக சேர்ந்தோருக்கு விரைவில் ராணுவப் பயிற்சி

கொழும்பு, செப். 4

புதிதாக இராணுவத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நாளை முதல் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

படையணிக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்ததை அடுத்து அவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை—

சிங்கள இளைஞர்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா படையினரின் தாக்குதலில் காயமுற்ற 3 இந்திய மீனவர் வடக்கு படை முகாமில்!

ஸ்ரீலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இந்திய மீனவர் ஒருவரின் சடலத்தை இந்திய பாதுகாப்பு அதிகாரிகளிடம் இலங்கை அரசு ஒப்படைக்க இருக்கிறது.

அச்சம்பவத்தில் காயமடைந்த மூன்று இந்திய மீனவர்கள் வடபகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

காயமடைந்தவர்களையும் உயிரிழந்தவரின் சடலத்தையும் கொழும்புக்குக் கொண்டுவர கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-க)

## அம்பாறையில் அகதிகளை மீளக்குடியமர்த்த முயற்சி

யாழ்ப்பாணம், செப். 4

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல அகதிகளும் இவ்வருடம் டிசம்பர் மாதத்துக்குள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா தெரிவித்துள்ளார்.

பெரும்பாலானவர்கள் இம்மாதம் முடிவுக்குள் குடியேற்றப்பட்டு விடுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மீளக்குடியமர்த்தலின் போது, தமிழ் அகதிகளின் பாதுகாப்புக் குறித்து அமைச்சர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

மீளக்குடியேற்றும் நடவடிக்கை தமிழ் மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDON EXAMS

C. I. M. A. (Stage — 1)
I. A. B. (All Stages)

ஆரம்பம்:- நாளை
**05 - 09 - 1993 8-30 மணி**

★ பிரபல விரிவுரையாளர் குழு
★ குறைந்த கட்டணம்
★ சிறந்த பெறுபேறுகள்

உறுதியான கல்வியைப் பெற
**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3RD CROSS STREET, JAFFNA.
(கி/6038)

---

# கண்ணீர் அஞ்சலி

## கதிரேசு தெய்வேந்திரம்

எமது சக மாணவ தலைவனான

செல்வன் தெ. ரதீஸ்குமாரின் தந்தையாரான திரு. கதிரேசு தெய்வேந்திரம் அவர்கள் 31-08-93 அன்று அகாலமரணமடைந்த செய்தி கேட்டு நாமனைவரும் மீளாத்துயரில் மூழ்கியுள்ளோம். எனினும்,


"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் மீள்வரோ"

என்பதற்கேற்ப, மனத்தை திடப்படுத்திக் கொண்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது மாணவர் முதல்வர்கள் அவை தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

மாணவ முதல்வர்கள் அவை
(27178) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

---

# விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 01 — 07 — 1921
உதிர்வு: 04 — 09 — 1992

## சின்னத்தம்பி வேலாயுதம்

ஒருநாளும் எம்மைப் பிரிந்து இருக்க மாட்டீர்
ஓராண்டு எப்படியோ மறைந்ததையா,
துயரத்தில் வெதும்புகின்ற உள்ளம் என்றும்
தொடர்கதை போல் எந்நாளும் தொடர்ந்து வரும்

ஆறாத துயரத்தில் ஆழ்ந்திட்டாலும் உங்கள்
ஆன்மாவின் அமைதிக்காய் வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக உரும்பராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இன்று (4-9-93) சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு இரங்கல் நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
சகோதரிகள்
மருமக்கள், மைத்துனர்,
மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (27177)

---

# விளையாட்டு நிகழ்வுகள்

ஆரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- ஏ. எல். எம். ஸி அணி எதிர் சென். மேரீஸ் வி. க. அணி

★ 4.30 மணி:- ஆவரங்கால் ம. வி. "பி" அணி எதிர் அரியாலை ஐ. க. "பி" அணி

o o o

காரைநகர் தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி: யங் ஹென்றிஸ் அணி எதிர் ஜொலி போய்ஸ் அணி

★ 4.30 மணி:- வளர்மதி "பி" அணி எதிர் சத்தியா நீல அணி

o o o

பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி திருமலை நட்சத்திர அணி எதிர் அரியாலை அணி

★ 5.00 மணி:- பாடும் மீன் II அணி எதிர் யங் றோயல் அணி

---

# புதிய ஆங்கில கல்வி நிலையம்

ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH

By: R SIVALINGAM
(Dip. in - English)

புதிய பிரிவு - 2
(04-09-1993)
காலை 8-00 மணி

புதிய பிரிவு - 3
05-09-1993
காலை 8-00 மணி

(கி-6036)

---

# PERSONAL NEW SCIENCE CENTRE

JAFFNA.

## 94 A/L

மீட்டல் வினா விடை
ஆரம்பம்: 04-09-1993
சனி

PHYSICS:
7 8 a. m.
திரு. ரவீந்திரநாதன்
B. Sc. (Cey Dip. in-Ed

CHEMISTRY:
8— 9 a. m.
திரு. செல்வா
B. Sc. (Hon.)

MATHS:
திரு. குணசிங்கம்
12-30p.m to 14-30p.m.
B. Sc. (Hon.)

(கி-5873)

---

# பிறந்த நாள் வாழ்த்து

செல்வி
## சுஜாதா பாலசுப்பிரமணியஐயர்

பாலசுப்பிரமணிய ஐயர்-பரமேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சுஜாதா தனது முதலாவது பிறந்த நாளை 1010/28, நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் இன்று (04-09—1993) விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, சித்திமார், மாமாமார், மாமிமார், அப்பப்பா, அம்மம்மா, அப்பம்மா, அம்மப்பா, அண்ணாமார், அக்காமார், அயலவர்கள் ஆகியோர் பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ வேண்டுமென மனநிறைவுடன் வாழ்த்துகின்றார்கள்.

(27186)

---

காரைநகர்
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
374, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

# முக்கிய அறிவித்தல்

## கிளைக் குழுத் தேர்தல் 1993

### கிளை இல 12 - வாரிவளவு

மேற்படி சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி 18-09-93 சனிக்கிழமை மு. ப. 9.00 — 10.00 மணிவரை அபேட்சகர்கள் நியமனங்களில் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றையதினம் மு. ப. 10.00 மணி முதல் 12.00 மணி வரை தேர்தல் / உதவித் தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்து மூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல் திகதி 25-09-93 சனிக்கிழமை
மு. ப. 9.00 — பி. ப. 4.00 மணிவரை நடைபெறும்.

கிளை இல: 12
கிளையின் பெயர்: வாரிவளவு
ஏற்றுக் கொள்ளும் இடம்:
வழக்கம்பரை, சுழிபுரம்.

திருமதி யோ. செல்வரத்தினம்
தேர்தல் உத்தியோகத்தர்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
01-09-1993. (கி-5880)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
21-08-1938
உதிர்வு:
14-09-1992

திதி:
04-09-1993

## அமரர் இரத்தினம் பழனித்துரை

விழி மங்கினும் ஒளி தந்த எம் தீபமே — இன்று
வானின்நின்றும் அகற்றப்பட்ட விண்மீனே
பாசமிகு இதயங்களை தரணியிலே தவிக்கவிட்டு
மௌனமாகிப் போனதேனோ
எமைவிட்டு நீர் பல தூரம் சென்றாலும்
நிழலாக உம் உருவம் நிலைத்திருக்கும் நெஞ்சமதில்...

இவரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

குழந்தைவேலு சிறிமோகன்

சிவன் புது வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (27188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

விவசாய சுயமுயற்சிக் கடன்கள் வழங்க

# மக்கள் வங்கிக்கு விதித்த கட்டுப்பாடுகள் தளர்வு!

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். மாவட்டத்தில் விவசாய மற்றும் சுயமுயற்சி கடன்களை வழங்குவதற்கு மக்கள் வங்கிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

மக்கள் வங்கிக் கிளைகளூடாக வழங்கப்படும் கடன்களில் இருந்து மீளப்பெறப்படும் தொகையில் 85 வீதத்தை மட்டுமே மீண்டும் கடனாக வழங்க வேண்டும்— என்று மக்கள் வங்கி தலைமைப்பீடம் வடபிராந்திய அலுவலகத்துக்கு கட்டுப்பாடு விதித்திருந்தது.

கடந்த வாரம் கொழும்பில் உயர் அதிகாரிகளுடன் வடபிரதேச முகாமையாளர் திரு. எஸ். அருணானந்தன் பேச்சு நடத்தியதன் பயனாக இக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

மீளப் பெறும் தொகையிலும் கூடுதலான நிதியை கடனாக வழங்க தற்சமயம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-8)

மலசல கூட வசதி இல்லாத

## தனியார் கல்வி நிலையங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை

மலசல கூட வசதி இல்லாத தனியார் கல்வி நிலையங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பல தனியார் கல்வி நிலையங்களில் மலசல கூட வசதிகள் இல்லாதது குறித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இதனை அடுத்தே நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் உள்ள இவ்வாறான தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பாக அவ்வப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-162)

## ஆங்கிலக் கலப்பினால் தமிழ் அழியும் நிலையில்

### சிட்னி மாநாட்டில் எச்சரிக்கை

சிட்னி, செப் 4

"ஆங்கிலச் சொற்களை நேரடியாகத் தமிழில் எழுதுவதால் தமிழ் அழியும் நிலையை அடைந்துள்ளது. இதைத் தடுத்து நிறுத்த தமிழர் யாவரும் ஆவன செய்ய வேண்டும்"

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சிட்னியில் நடந்த 5ஆவது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டில் நியூசிலாந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முன்மொழிந்து, மாநாட்டால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம் இவ்வாறு கூறியது.

"இந்திய தமிழ்ச் சஞ்சிகைகளில் ஒவ்வொரு வசனத்திலும் 30-40 சத வீதத்துக்கு மேலாக ஆங்கிலச் சொற்கள் இருப்பதைக் காணலாம். இப்படியே போனால் தமிழ் அழிந்து ஆங்கிலத் தமிழாகி விடும்" என்று தீர்மானம் மேலும் கூறியது. (க-30)

யுத்தக் கைதிகளை விடுவிக்க

## செஞ். சர்வதேசக் குழு உதவ முன்வர வேண்டும்

### பௌத்த அமைப்பு கோரிக்கை

கொழும்பு, செப். 4

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளிடம் கைதிகளாக உள்ள 31 பொலீஸாரையும் ஓர் இராணுவ சிப்பாயையும் விடுவிப்பதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு உதவவேண்டும்.

கண்டியில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் உலக பௌத்த சகோதரத்துவ அமைப்பு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

உலக பௌத்த சகோதரத்துவ அமைப்பின் தலைவர், இது தொடர்பான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார். (இ)

## அயோத்தி மசூதியை இடித்தவர் மீது வழக்கு

### பிரதமர் நரசிம்மராவ் அறிவிப்பு

புதுடில்லி, செப். 4

அயோத்தியில் இருந்த பாப்ரி மஸ்ஜித் மசூதியை இடித்தவர் மீது விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் அமைப்பு ஒன்றின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு பேசியபோது பிரதமர் இவ்வாறு அறிவித்தார்.

அரசியலில் மதம் கலப்பதைத் தடைசெய்யும் சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## நெசவு உற்பத்தி உதவத் திட்டம்

வலிகாமம் தெற்கு, செப். 4

நெசவு உற்பத்தியாளர்களுக்குத் தேவையான நூல் வகைகளையும், ஏனைய உபகரணங்களையும் பெற்றுக் கொடுக்க தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் போதியளவு நூல் கிடையாமையால் பல நெசவு உற்பத்தியாளர்கள் கஷ்டப்படுகின்றனர். இவர்களின் கஷ்டங்களை போக்கும் வகையில் உதவி புரிய தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் முன்வந்துள்ளது. (இ-152)

## செம்மணி வயல் பகுதியில் கிடந்த சடலம்

யாழ்ப்பாணம், செப். 4

வெள்ளை வேட்டியும், பிறவுண் கலர் ஷேர்ட்டும் அணிந்து காணப்பட்ட சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒரு நபரின் சடலம் அடையாளம் காண்பதற்காக நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் செம்மணி வயல் பகுதியில் மூன்று நாட்களாக இந்தச் சடலம் கிடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சடலத்திற்கு அருகில் ஒரு கிருமிநாசினிப் போத்தலும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## இந்திய கடற்படையின் புதிய தளபதி

புதுடில்லி, செப். 4

இந்திய கடற்படையின் புதிய தளபதியாக வைஸ் அட்மிரல் வி. எஸ். ஷெகாவத் அடுத்த மாதம் முதலாம் திகதி பதவி ஏற்பார் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## பாடசாலைக்கு கொட்டகை

யாழ்ப்பாணம், செப். 4

இலவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்துக்கென மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் அமைக்கப்பட்ட நூறு அடி நீளமான கொட்டகை ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்து கொட்டகையைத் திறந்து வைத்தார்.

தமிழீழ கல்விக் கழகத்தினரின் ஏற்பாட்டில் இந்தப் புதிய கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. (த-5)

## ஜூலையில் மட்டும் 820 பேர் மலேரியாவினால் பாதிப்பு

கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 820 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர்.

இவர்களில் 69 பேர் மூளை மலேரியாவினாலும், 751 பேர் சாதாரண மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர்.

இக் காலப்பகுதியில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 49 பேரும், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 பேரும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேரும் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை இக்காலப் பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் மூளை மலேரியாவினால் 16 பேரும், சாதாரண மலேரியாவினால் 621 பேரும் பாதிக்கப்பட்டனர். (த-162)

## வைத்திய ஆய்வுப்பட்டறை

யாழ்ப்பாணம், செப். 4

சஞ்சீவி இரத்ததான இயக்கத்தின் ஏற்பாட்டில், வெளிப்பாட்டு சிகிச்சை மூலம் தனிநபர் ஆளுமை விருத்தியை வளர்த்தெடுப்பதற்காக இளைஞர்கள் பங்கு பற்றும் ஆய்வுப்பட்டறை ஒன்று எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 5 மணி வரை கபாலி விடுதியில் நடைபெறும்.

ஆய்வுப்பட்டறையில் யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். மனநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தயா சோமசுந்தரம், அருட்தந்தை எஸ். டேமியன், உளவளத் துணையாளர்கள் திரு. ஏ சசிகாந்தன், திரு. வி. கந்தவேல் ஆகியோர் விரிவுரை நிகழ்த்துவர்.

ஆய்வுப்பட்டறையில் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும், புகுமுக மாணவர்களும், ஜி சீ ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களும் பங்குபற்றுவர்.

தொகுதி ஒன்றில் பங்குபற்றுபவர்களுக்கான தேர்வுகள் முடிவடைந்துள்ளதாகவும் —

தொகுதி இரண்டில் பங்குபற்ற விரும்புபவர்கள் இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் சேரலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (த)

கைத்தொழில் நிறுவனங்கள்

## 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும்

கைத்தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான இறுதி நாள் இம்மாதம் 15ஆம் திகதி என்று தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழீழத்தில் கைத்தொழில் மேம்பாட்டினை மையமாக வைத்து அதனது முதற்கட்ட நடவடிக்கையாக கைத்தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்யும் வேலைகளை தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. தமிழீழத்திலே முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கும் கைத்தொழில் நிறுவனங்களும், கடந்த காலங்களில் இயங்கி தற்கால சூழ்நிலையால் இயங்காதிருக்கும் கைத்தொழில் நிறுவனங்களும், புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கைத்தொழில் நிறுவனங்களும் தம்மை தவறாது பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்யும் நடவடிக்கைகளில் சவர்க்காரம், கண்ணாடி, இரசாயனப் பொருள்கள், புடைவைக் கைத்தொழில், விவசாய உபகரணங்கள், உலோக உற்பத்திப் பொருள்கள், இறப்பர் இறப்பர் சார்ந்த பொருள்கள், தும்பு சார்ந்த பொருள்கள், தோல் பொருள்கள் உற்பத்தி, மின்சார உபகரணங்கள் இலத்திரனியல், கட்டடப் பொருள்கள், உணவு உற்பத்தி (உணவகம் தவிர்ந்த) கால்நடை உணவு (கோழித்தீன் உட்பட), மருந்து வகை, பல்பொருள்கள் (கற்பூரம், மெழுகுவர்த்தி, பற்பொடி, சியாக்காய்ப் பவுடர், ஊதுபத்தி போன்றவை) ஆகிய நடவடிக்கைகள் உள்ளடங்கும்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

பரிசளிப்பு விழா

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 11 — 09 — 1993
நேரம்: முற்பகல் 9-30 மணி

பிரதம அதிதி: திரு. அ. கதிர்காமர் B. Sc , M. A. (Sc. Ed.)
முன்னாள் அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
பதிவாளர் - குருமடம், மருதனார்மடம்.

பரிசு வழங்குபவர்:
திருமதி மகிழ்மலர் கதிர்காமர்

இவ்விழாவிற்கு பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர், நலன்விரும்பிகள்.

(இ-5875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-00—10-30 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(27169)

### தவறிவிட்டது

1-9-93 அன்று புதன்கிழமை கல்லை வெளியூடாக செல்லும்போது எனது துவிச்சக்கிவண்டி தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் N. ரவி, ஹொலிவூட் சனூன், கன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(6641)

### ஆண்டு - 4 புலமைப்பரிசில்

ஆண்டு 4ற்கு (புலமைப் பரிசில் 1994) பத்தாவது தொடர் பரீட்சை 5-9-93 ஞாயிறு முற்பகல் 8-00, முற்பகல் 11-00 நேரங்களில் நடைபெறும். வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(27178)

### உடுபுடைவை அன்பளிப்பு

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சர்வமத மகா சபைப் பிரசங்க நூற்றாண்டின் 3ஆம் கட்ட விழா அண்மையில் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் இடம்பெயர்ந்த 84 குடும்ப அங்கத்தவர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகானானந்தாஜி அனுப்பிய உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

## "A" LEVEL CENTRE

First Lane,
Point-Pedro Road,
Jaffna.

**94 துரித மீட்டல்**
(Paper Class)

ஆரம்பம்:
**05-09-1993**
ஞாயிறு 6-15 a.m.

CHE.
Mr. Nagaratnam
B Sc.

PHY.
Mr. Jeyaseelan
B Sc.

PURE ]
APP ]
Mr. Nithiyananthan
B. Sc

ZOO.
Mr. Gnanendran
Dip in Sc.

BOT.
Mr. Sivaveerasingam
B. Sc.

மேலும் விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-5838)

# மணமகள் தேவை

யாழ் இந்து பாரம்பரிய நற்பழக்க வழக்கத்தை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவரும், யாழ். பிரபல கல்லூரியில் பட்டதாரி (M. Sc லண்டன்) ஆசிரியரும், கணனியியலில் நன்கு தேர்ச்சி பெற்றவரும், 39 வயதுடையவரும், சிவந்த நிறமும், 5½ அடி உயரமுள்ளவரும், செவ்வாய் தோஷமற்ற; கார்த்திகை நட்சத்திரமும் கொண்ட தீய பழக்கவழக்கங்களற்ற மணமகனுக்கு உகந்த இந்து சமய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர், கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

இல: 557,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(27172)

## யாழ். பல்கலைக்கழக
# வெளிவாரி விரிவுரைகள்

★ B. A. PART - I
★ B. Com. PART - I

**ஆரம்பம்: 05 - 09 - 1993**

குறிப்பு:- பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருப்பதால், பரீட்சை முடிவு வரும்வரை காத்திராது விரிவுரைகளுக்கு சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(இ-5871)

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
## பொன்விழா ஆண்டின்
# கல்விக் கண்காட்சி

தலைவர்: திருமதி தி. நாகராசா, அதிபர்
காலம்: 04 - 09 - 1993 காலை 9மணி
இடம்: கல்லூரி மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம்
2. வரவேற்புரை
3. பிரதம விருந்தினர் உரை:
   பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன்
   தலைவர், உடற்றொழிலியற்றுறை, மருத்துவ பீடம், யாழ் பல்கலைக் கழகம்
4. சிறப்பு விருந்தினர் உரை:
   திரு. வே. பொ. பாலசிங்கம்
   ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்

பிரதம விருந்தினர் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

காலம்: 4, 5, 6, 7, 8 ஆம் நாட்கள்
செப்டெம்பர் மாதம் 1993

நேரம்: காலை 9மணி முதல் பிற்பகல் 3மணி வரை

4, 5ஆம் நாட்கள்:
யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்

6, 7, 8ஆம் நாட்கள்:
பிற பாடசாலை மாணவர்கள், ஆர்வலர்கள்

உயர்தர வகுப்பும் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை

★ விஞ்ஞானம் ★ கணிதம் ★ வர்த்தகம்
★ கலை ★ சமூகக்கல்வி ★ அழகியற் கல்வி
★ தொழில் நுட்பம்

தொடர்பான கல்விக் கண்காட்சி

**அனுமதிக் கட்டணம்: ரூபா 5-00**

பாடசாலை மாணவர்கள் ஏனைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பொன் விழாச் சபையினர்.

அன்பளிப்பு:
அன்னராஜா ஸ்ரோர்ஸ்,
158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-6034)

# MATHS CENTRE
## A/L 94 மீட்டல் வகுப்பு

தூய ]
பிரயோக ] கணிதம் திரு. அருளானந்தம்

**ஆரம்பம்: 05 - 09 - 93 ஞாயிறு**
10. 00 a. m.

★ Physics, Chemistry நேர அட்டவணை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(6458)

# சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

பாட நெறிகள்:

● தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆங்கிலம்
  — 6 மாத காலப் பயிற்சி (London Pitsman)

● தட்டெழுத்து சுருக்கெழுத்து தமிழ்
  — 6 மாத காலப் பயிற்சி

மனையியற் பாடநெறிகள்
(பயிற்சிக் காலம் 1 வருடம்)

★ கேக் ஐசிங்
★ சமையற் கலை
★ தையற் கலை
★ பூ வேலை (Stocking Net)
★ சிகை அலங்காரம்
★ கைப் பணிகள்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: **06-09-1993**
காலை 8-30 மணி

— அதிபர்.

(சி-5876)

## கல்வித்திணைக்கள
# முறைசாராக் கல்விப் பயிற்சி - 1993
## REFRIGERATION AND AIRCONDITIONING
(குளிரூட்டி)

மேற்படி பயிற்சி நெறி யாழ், மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப் பெறவுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோரை கல்லூரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 12-09-1993இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம். ஆண்டு 9 அல்லது அதற்கு மேல் தகைமையுடைய எவரும் விண்ணப்பிக்கலாம்.

அதிபர்,
யாழ். மத்திய கல்லூரி.

(சி-6035)

## 1994இல் நடைபெறவுள்ள
# ஆண்டு 5 பொதுப் பரீட்சைகளுக்கான

★ விஷேட பயிற்சி வகுப்புகள்
★ கட்டுரை வரைவதில் சிறப்புப் பயிற்சிகள்
★ 30 பயிற்சிப் பரீட்சைகள்

மாணவரின் தற்போதைய தரத்திற்கேற்ப பிரிவுகள் அமைப்பதற்கான போட்டிப் பரீட்சை ஒன்று அக்டோபர் 3ஆம் திகதி நடைபெறும்.

இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் பெயர்களைப் பதிவு செய்வோர் மட்டுமே பரீட்சைக்கு தோற்றி வகுப்பில் அனுமதிக்கப்படுவர்.

- அதிபர்.

ESTD:- 1973 REGD:- № J/7993
**The Express Institute**
IRUPALAI - KOPAY

(27170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

## உதயன்

## உத்தரவும் உள்நோக்கமும்

யாழ். நகருக்குள் அமைந்திருக்கும் விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிக்குமாறு முப்படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த உத்தரவில் புதிதாக ஒன்றுமில்லை. கடந்த முப்பத்தொன்பது மாதங்களாக விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிப்பது என்பதே முப்படைகளினதும் முழு நேர வேலையாக இருக்கிறது. யுத்தம் தொடங்கிய மூன்று மாதங்களில் இதனைச் சாதித்துவிடப் போவதாக அப்போதைய "ஹீரோ" ரஞ்சன் விஜேரத்தினா சூளுரைத்தார். விடுதலைப் புலிகளைப் பாலகர்களின் படை என்றும், தமது படைகளைக்கண்டு பாலகர் படை பயத்தில் சிறுநீர் கழித்து புறமுதுகு காட்டும் என்று நையாண்டியும் செய்தார்.

அவரது யுத்த தள ஞானமும், மதிப்பீடும், கணக்கும் எந்தளவுக்குத் தப்பானது என்று, அவர் இப்போது உயிருடன் இருந்தால் நேரில் அறிந்திருப்பார்; உணர்ந்திருப்பார். பாவம், அதனைக் கண்டு கொள்ள வாய்ப்பின்றி மேலோகம் சென்றுவிட்டார்!

விடுதலை வேட்கை கொண்ட போராளிகள் விழ விழ எழுவார்கள். ஒரு போராளி விழுந்தால் அவனுக்குப் பதில் ஒன்பது போராளிகள் புதிதாக உருவாகுவார்கள். தமிழ் இளைஞர்களின் விடுதலை வேட்கையை அமைச்சர்களோ, இராணுவ உயர் அதிகாரிகளோ இது வரை புரிந்து கொள்ளவில்லை!

இதனை ஆரம்பத்திலேயே புரிந்திருந்தால், இந்திய இராணுவத்துக்கு உண்டான அனுபவத்தைக் கண்டு உணர்ந்திருந்தால், போர் தொடங்கிய இரண்டு மூன்று மாதங்களிலேயே இராணுவத் தீர்வைக் கைவிட்டு அரசியல் தீர்வை நாடி சமாதானத்தை உருவாக்கியிருக்கலாம். அரசாங்கத்துக்கு—முப்படைகளுக்கு—இதுவரை ஏற்பட்ட பெரும் ஆளணி, ஆயுத இழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம். தமிழர் தரப்பிலும் மக்களும் அவர்தம் உடைமைகளும் அழிக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை.

விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிப்பதாகக் கூறியே கடந்த 39 மாதங்களாகத் தமிழர்கள் தொடர்ச்சியாக இனப்படுகொலை செய்யப்படுகின்றனர். அவர்களது உடைமைகள் அழிக்கப்படுகின்றன. இவற்றைக் கண்டு 'ஆமி'யின் குண்டுக்கும், ஷெல்லுக்கும் சாவதைவிட வீரப் போராளியாகி! இலட்சியத்துக்காக ஆயுதம் ஏந்தி உயிரைத் தியாகம் செய்வது மேல் என்ற வேட்கையுடன் தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகளாக மாறியதை, மாறுவதை அரசாங்கம் பகுத்துணரவில்லை. ஒரு வகையில் விடுதலைப் புலிகளுக்கு ஆட்சேர்த்துக் கொடுப்பதும் முப்படைகளின் செயற்பாடே என்பதனை உய்த்து உணர முடியவில்லை.

இராணுவத் தீர்வு என்ற மாயையில் மதி மயங்கியதால் விடுதலைப் புலிகளிடம் பேரடிகளை வாங்கிய பின்னரும், இன்னும் பாடம் படிக்காதிருப்பது என்பது அரசும் படைகளும் மேன்மேலும் தோல்வியை நாடிச் செல்வதாகவே அமையப் போகிறது!

விடுதலைப்புலிகளின் முகாம்களை அழிப்பது என்பது—

இராணுவம் ஒன்றும் சளைத்ததல்ல; புலிகளுக்குப் பதிலடி கொடுத்தே தீரும், என்று இங்கள மக்களுக்குப் பொய்மையைக் காட்டிக் கொண்டு —

தாக்குதல்களைத் தீவிரப்படுத்தித் தமிழர்களை இனப்படுகொலை செய்வது என்ற இலக்கை நோக்கியதே அன்றி வேறல்ல!

## ஆலயங்களில்

அராலி செம்தோட்ட வைரவர் ஆலய மணவாளக் கோல பஞ்சகுண்ட மகா சம்பாபிஷேகம் இன்று சனிக்கிழமை நடைபெறும். (க-18)

o o o

மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றமும், கொடியேற்றி திருவிழா ஆரம்பமாகிய 50 ஆம் ஆண்டு பூர்த்திவிழாவும் நடைபெறும். தேர்த்திருவிழா 14 ஆம் திகதியும், தீர்த்தத்திருவிழா 15ஆம் திகதியும் இடம் பெறும். (க-45)

o o o

வண் மேற்கு காட்டுத்துறை அம்பலவாண விக்னேஸ்வரர் கோயில் இன்று சனிக்கிழமை பகல் அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும், மாலை திருவூஞ்சலும் திரு வீதி உலா உற்சவமும் நடைபெறும். (க)

o o o

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறும். (உ-117-75)

## கல்வி வளர்ச்சிக் கழகம் மாங்குளத்தில் திறப்பு

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மற்றும் மாணவர் அமைப்பினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மாங்குளத்தில் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று கடந்த புதன் கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

அறிவொளி கல்வி வளர்ச்சிக் கழகம் எனப் பெயரிடப்பட்ட அந்தக் கழகத்தை முல்லை, மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து திறந்துவைத்தார்.

திறப்பு விழாவில் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் தேசியக் கொடியை ஏற்றினார். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின், வன்னிமாவட்ட இணைப்பாளர் திரு. ரகுநாதன், முல்லை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. தணிகாசலம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். [த-5]

## சென்னை பொலிஸில் அதிரடி மாற்றங்கள்!

சென்னை, செப். 4

சென்னை நகர பொலிஸ் துறையில் நான்கு துணைக் கமிஷனர்களும் 19 உதவிக் கமிஷனர்களும் 26 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் ஒரே நேரத்தில் இடமாற்றஞ் செய்யப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள். தமிழகப் பொலிஸ் துறை இதுவரை கண்டிராத அதிரடி மாற்றங்களினால் பொலிஸார் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இந்த இடமாற்றங்கள் தவிர, அடுத்த சிலதினங்களில் இன்னும் சில மாற்றங்கள் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (உ-எ)

## அவசர திருத்த வேலைக்காக 'நரேமா' சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 4

திருகோணமலைக்கும் தீவுப் பகுதிக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த "நரேமா" கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்துக்கு நேற்று மாலை அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் அவசர திருத்த வேலை இருப்பதாலேயே இச்சேவையை இடைநிறுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"நரேமா" கப்பல் மூலம் அரச ஊழியர்களும் பயணம் செய்து வந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-3)

## இன்று

நெல்லண்டையான் வெளியீட்டுக் கழக "ஆலய வழிபாடும் தத்துவமும்", என்ற ஆறாவது நூல் வெளியீட்டு விழாவும் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் ஆர்ச்சாரிய குருப் பட்டாபிஷேக பத்தாம் ஆண்டு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் பருத்தித்துறை சிவன் கோவிலடி பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். (க)

o o o

யாழ். இலக்கிய வட்டத்தின் விடுமுறை கால இலக்கிய சந்திப்பு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆனைக்கோட்டையிலுள்ள புதுவொளி சிவபாதத்தின் இல்லத்தில் நடைபெறும். இன்றைய நிகழ்வில், "நவீன இலக்கியமும் சமகால போக்கும்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு யாழ். இலக்கிய வட்டத் தலைவர் ஆ. வைத்திலிங்கம் தலைமைதாங்குவார்.

o o o

அளவெட்டி ஞானோதய சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள அளவெட்டி மல்லாகம் பல.நோ.கூ.சங்கப்பணிமனையில் நடைபெறும். (உ-89)

## பேராளியின் மிருதங்க அரங்கேற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிக் கலைஞர் செல்வன் தினேஷின் (அமிர்தநாயகம் ஸ்ரீகாந்தா) மிருதங்க அரங்கேற்றம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரங்கேற்ற விழாவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமை வகிப்பார்.

விடுதலைப் புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், வண பிதா பிரான்சிஸ் ஜோசெப் அடிகளாரும் வாழ்த்துரை வழங்குவார்கள். இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் மதிப்புரை ஆற்றுவார்.

அரங்கேற்ற இசையரங்கில் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் இசை வழங்குவார். (அ)

## படைப்புகள் இலட்சியத்தை முன்னெடுக்க வேண்டும்

### நூல் வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், செப். 4

"இலட்சியத்துக்கு ஒரு பொதுநோக்கு இருக்கவேண்டும். படைப்புகள் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்"

மல்லிகைப் பந்தல் வெளியீடான தில்லைச்சிவனின் 'நான்' கவிதைச் சுயசரிதை நூலை வெளியிட்டுப் பேசிய எழுத்தாளர் செங்கை ஆழியான் இவ்வாறு கூறினார்.

திரு. ச. பாலசுந்தரம் தலைமையில் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் அண்மையில் நடைபெற்ற மேற்படி விழாவில் உரை நிகழ்த்திய கவிஞர் சோ. பத்மநாதன், "மானிட வாழ்க்கை குறித்த சிந்தனைகள் ஒரு தெளிவை நோக்கியதாக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தாயகம் திரும்பும் அகதிகள்; தங்க வைப்பதில் நெருக்கடி

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய ஈழ அகதிகளுக்கு இட வசதியினை ஏற்படுத்துவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களைத் தங்க வைப்பதற்காக வவுனியாவில் ஆசிக்குளம், வேப்பம்குளம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட அகதி முகாம்கள் நிரம்பி வழிவதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தாயகம் திரும்புவோரை அங்குள்ள முகாம்களுக்கு அனுப்பி வைக்கவேண்டாம் என்று அகதிமுகாம் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து தாயகம் திரும்பும் ஈழ அகதிகள் திருகோணமலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் திருமலையில் தற்போது கடும் மழை பெய்து வருவதால் அங்கும் இவர்களைத் தங்க வைப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (த-173)

## நாளை

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் "திருமுறை விழா" நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பமாகும்.

இவ்விழாவில் நவாலி மகேஸ்வர இல்ல மாணவர்கள் நடிக்கும் கண்ணப்ப நாயனார் நாடகம், அறிஞர் சொற்பொழிவுகள், பண்ணிசை-பக்திப் பாடல்கள், பட்டி மண்டபம் ஆகியனவும் இடம்பெறும். (க)

o o o

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு தமிழ் எழுத்தாளர் பணிமனையில் நடைபெறும். ஆய்வரங்கில் "சோதிட கருமூலங்கள்" என்ற தலைப்பில் பொது விவாதம் இடம் பெறும். ஆய்வரங்கிற்கு [illegible] தலைமை தாங்குவார். (அ)

## ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை; ஓய்வுபெற்றவர்களுக்கு நியமனம்!

பாடசாலைகளில், குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களும் அரச ஊழியர்களும் ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

புதிய உயர்கல்வி, கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் டபிள்யு ஜே. எம். லொக்குபண்டாரவின் உத்தரவின் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பின்தங்கிய பாடசாலைகள் உள்ள பகுதிகளில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் இந்த நியமனம் வழங்கப்படுவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது

மாணவருக்கு போதிக்கக் கூடிய திறமையுள்ளவர்களுக்கும் ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சிபெற்றவர்களுக்கும் இந்த நியமனம் வழங்கப்படுவது குறித்து அமைச்சு ஆராய்ந்து வருவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்றவர்களை ஆசிரியராக நியமிப்பதன் மூலம் மாணவரின் ஆங்கில அறிவை வளர்க்க முடியாது என்று அமைச்சு அதிகாரிகள் கருதுகின்றனர்.

இதேவேளை— தற்போது சேவையில் உள்ள 19 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்களின் ஆங்கில அறிவின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கும்படியும் அமைச்சர் தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (த-எ)

## கானகம் அழியின் வளம் வரண்டு விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை சிவசுப்பிரமணியம்
(சடையப்ப சுவாமிகள்)

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை சிவசுப்பிரமணியம் (சடையப்ப சுவாமிகள்) 3-9-93 அதிகாலை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் உரும்பராயில் இன்று (4-9-93) நடைபெறும்.

தகவல்:
க. கனகரத்தினம் (தமையன்)
உரும்பராய் கிழக்கு.
(27182

## திருமதி தெய்வநாயகி கந்தையா

மல்லாகம் காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் கந்தையா அவர்களின் அன்பு மனைவி தெய்வநாயகி 03-09-1993 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தவராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), திருமதி கனகமணி, திருமதி நகுலேசதேவி (விவாக, இறப்பு, பிறப்பு பதிவாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சரோஜினிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, அருணோதயா கல்லூரி, அளவெட்டி), காலஞ்சென்ற சின்னையா (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்), காலஞ்சென்ற இராஜமனோகரன் (விவாக, இறப்பு, பிறப்புப் பதிவாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை (03-09-1993) அன்று நாதன் வீதி, மருதனார்மடத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
எம். கே. தவராஜா (மகன்)
நாதன் வீதி,
மருதனார்மடம்.
(27185)

## கதிரவேலு தெய்வேந்திரம்

கதிரவேலு தெய்வேந்திரம் (நெல் சந்தைப்படுத்தும் சபை - ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) 31-08-93 அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலு — அமராவதி தம்பதிகளின் அருமை மகனும், கனகமணியின் அன்புக் கணவரும், ரஞ்சனாதேவி (ஆசிரியை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), ரவீந்திரன் (H. N. D. A 2 ஆம் வருடம் தொழில் நுட்பக் கல்லூரி), ரதீஸ்வரன் (படம் வரை பயிலுநர் தொழில் நுட்பக் கல்லூரி), ரதீஸ்குமார் மாணவ முதல்வர் யாழ். மத்திய கல்லூரி), ரஞ்சிதமலர் (மாணவி கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), ரமேஸ்வரன், ரங்கேஸ்வரன் (யாழ். மத்திய கல்லூரி), தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (03-09-93) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
36/4, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(27181)

## திருமதி அன்னம்மா சிவலிங்கம்
(நயினாதீவு)

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தில் வசித்தவரும் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் வசித்தவருமாகிய திருமதி அன்னம்மா 03-09-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவலிங்கம் (விவேகானந்த அச்சக தாபகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா தையலம்மை அவர்களின் மகளும், நவநீதகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற இறைவரி உத்தியோகஸ்தர்), புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனாட்சி (பிறப்பு இறப்பு பதிவாளர் நயினாதீவு), ப. க. மகாதேவா (முன்னாள் தபாலதிபரும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்புனித யோசப் வித்தியாலயம் கொழும்புத்துறை) ஆகியோரின் மாமியாரும், மனோன்மணி காலஞ்சென்ற செல்வத்துரை, யோகம்மா, பரநிருபசிங்கம் ஓய்வுபெற்ற அதிபர்), பாலசிங்கம் ஓய்வுபெற்ற இறைவரி உத்தியோகஸ்தர்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, செல்வநாயகம், கந்தசாமி, கிருஷ்ணபிள்ளை, கிருஷ்ணசாமி, நாகேசு மற்றும் கார்த்திகேசு, திருநாவுக்கரசு, சிவகங்கை, வரதலெட்சுமி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும், தயாளினி, சுகந்தன், கெங்காதரன், நிமலினி, சுகிஸ், பிரேமானந்தா, சிவானந்தா, துஷித்தா, ஜெயக்குமாரன் (சுவிஸ் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4-9-93) மாலை 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. க மகாதேவா (மருகர்)
18, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(27180)

---

பயங்கரவாத இயக்கம்தான்; ஆனால்

# பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிப்பதைத் தவிர வழியில்லை

## இஸ்ரேல் பிரதமர் ஒப்புக் கொள்கிறார்

ஜெருசலம், செப். 4

பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிப்பதைத் தவிர இஸ்ரேலுக்கு வேறு வழியில்லை.

இஸ்ரேல் பிரதமர் யிற்ஷாக் ரபின் முதன் முறையாக முன் கண்டவாறு அறிவித்திருக்கிறார்.

பலஸ்தீன விடுதலை இயக்கம் நம்பு சார்ந்த பேச்சுவார்த்தைக்குப் பொருத்தமான அமைப்பு அல்ல; அது ஒரு பயங்கரவாத அமைப்பு. ஆனால் பேச்சுவார்த்தைக்கு பலஸ்தீன விடுதலை இயக்கத்தை விட்டால் வேறு வழி என்ன என்றும் திரு. ரபின் கேள்வி எழுப்பினார்.

இதனிடையில்—

இஸ்ரேல் முன்வைத்துள்ள சுயாட்சித் திட்டமும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிப்பதும் தனித்தனி ஒப்பந்தங்களாக அமையும் என்றும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரஸ் தெரிவித்தார்.

இதேவேளை—

இஸ்ரேல் சிபாரிசு செய்த காஸா-ஜெரிக்கோ சுயாட்சித் திட்டத்தை அங்கீகரிக்கக் கூட்டப்பட்டிருக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கச் செயற்குழு கூட்டத்தில், இந்தத் திட்டத்திற்குக் கடுமையான எதிர்ப்பு எழுந்த போதிலும், யாசிர் அரபாத் தமது முயற்சியில் வெற்றியீட்டும் சாத்தியம் எழுந்துள்ளது என்று சொல்லப்படுகின்றது.

மேலும் பலஸ்தீனம் சுதந்திர நாடாகி ஜோர்டான் நாட்டுடன் சமஷ்டி அரசமைப்பில் இணைவதே தமது கொள்கை என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் தனது நிலைப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளது.

இஸ்ரேல், ஜோர்டான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளுடனும் தீவிர பேச்சுகளை ஆரம்பித்துள்ளது என்றும்—

இதனால் அனைத்துத் தரப்பினருடனும் ஒப்பந்தம் ஒருமித்து கைச்சாத்திடும் வாய்ப்பு உருவாகி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இக்கட்டத்தில் —

தமது இயக்கத்துக்கும் இஸ்ரேல் அரசுக்கும் இடையே நோர்வேயில் தொடர்ந்தும் இரகசியப் பேச்சுவார்த்தை நடந்துவருவதாக பலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்திருக்கிறது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க தற்போது வளைகுடாவில் உள்ள அரபு நாடுகள் புதிய முயற்சியை ஆரம்பித்துள்ளன.

பலஸ்தீன விடுதலை இயக்கமும், இஸ்ரேலும் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாலும், இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலை தொடர்ந்தும் நடத்தப்போவதாக பலஸ்தீன விடுதலை தீவிரவாத ஹமோஸ் அமைப்பு அறிவித்திருக்கிறது.

---

**காங்கேசன்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து வேலை நிறுத்த கடிதத்தை வழங்கவும், கூட்டுத்தாபன தலைமை அலுவலகம் முடிவு செய்து விட்டதாக அறிய வருகிறது.

ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டம் ஒன்றை கூட்டுத்தாபன நிர்வாகம் வகுத்துள்ளது.

இத் திட்டத்தின்படி ஒரு தொழிலாளி ஆகக் கூடிய தொகையாக 2 லட்சம் ரூபாவைப் பெற முடியும்.

5 வருடங்கள் வேலை செய்தவருக்கு 10 மாதச் சம்பளமும் —

10 வருடங்கள் வேலை செய்தவருக்கு 25 மாதச் சம்பளமும் —

15 வருடங்கள் வேலை செய்தவருக்கு 35 மாதச் சம்பளமும் —

20 வருடங்கள் வேலை செய்தவருக்கு 40 மாதச் சம்பளமும் —

25 வருடங்கள் வேலை செதவருக்கு 50 மாதச் சம்பளமும் — வழங்கக் கூடிய வகையில் அத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

கொழும்பு சென்றுள்ள இமெந்து பொதுத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் நஷ்டஈட்டுத் தொகையை அதிகரிப்பது குறித்து அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றனர். (ஒ-3)

---

**வடக்கு...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதியினால் அனுமதி வழங்கப்படும் வள்ளங்கள் மாத்திரமே இந்தக் கடற் பிராந்தியத்தில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் இலங்கை வானொலி தெரிவித்தது.

வடபகுதிக் கடலில் செல்லும் கடற்படையினரின் படகுகளை, விடுதலைப் புலிகளின் கடற் கரும்புலிகள் படகுகளில் சென்று தாக்கித் தகர்க்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடலாம் என்று அஞ்சப்படுவதாகவும்—

அதனையடுத்தே அரசு இத் தடையை உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. (உ-எ-3)

---

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணம் மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம் யாழ்ப்பாணத்தில் உள்ள கழகங்களின்—6 பேர் கொண்ட அணிகளுக்கிடையில்— மட்டுப்படுத்தப்பட்ட ஐந்து ஓவர்களைக் கொண்ட தோற்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை அக்டோபர் 2, 3 ஆம் திகதிகளில் நடத்தவிருக்கிறது.

''மிட் - ரவுண்'' கிண்ணத்துக்காக ''எஸ். எம். பெர்னாண்டோ'' நிறுவனத்தின் ஆதரவில் இச் சுற்றுப் போட்டி நடத்தப்படவிருக்கிறது. (உ)

---

**புதிதாக...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையில் சேர்த்துக் கொள்வதற்காக தென்பகுதியில் பல்வேறு உத்திகளில் விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

தொலைக்காட்சி மூலமும் ''நாட்டைக் காப்பாற்ற இராணுவத்தில் சேருமாறு'' சிங்கள இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

இராணுவத்தில் சேர்பவர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் என்று அந்த விளம்பரத்தில் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-6)

---

**படைப்புகள்...**

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க வேண்டும் என்பதை தில்லைச்சிவனின் நூல் உணர்த்துகிறது'' என்று கூறினார்.

திரு. டொமினிக் ஜீவா, திரு. ச. சத்தியசீலன், திரு. ஆ சபாரத்தினம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். திரு. தில்லைச்சிவன் பதில் உரை நிகழ்த்தினார்.

நூலின் முதற் பிரதியை திரு. பாலசுந்தரத்திடமிருந்து திரு. சி. இராசரத்தினம் ஜே. பி. பெற்றுக்கொண்டார். (க-111)

---

## குளங்கள் ஆழமாக்கல்

வலிகாமம் தெற்கு, செப். 4

மாரி காலத்தில் அதிக அளவு நீரைத் தேக்கி, நீர்ப்பாசனம் செய்வதற்கு வசதியாக வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் உள்ள பல குளங்கள் ஆழமாக்கப்பட்டுள்ளன. (த-152)

## இந்து மகளிர் கல்வி கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் கல்விக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி தி. நாகராசா தலைமையில் ஆரம்பமாகும்;

பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உடற்றொழிலியற் துறை தலைவர் பேராசிரியர் எஸ்.வி. பரமேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மாநகர சபை ஆணையாளர் திரு.வே. பொ. பாலசிங்கமும் கலந்து கொள்வர்.

இக்கண்காட்சி எட்டாம் திகதி வரை தினமும் காலை 9 மணி முதல் நடைபெறும்.

இன்றும், நாளையும் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளும்—

நாளை மறுதினம் முதல் 8 ஆம் திகதி வரை பிற பாடசாலை மாணவ, மாணவிகளும்— கண்காட்சியைப் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-த-8)

---

**கடற்...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குருநகரைச் சேர்ந்த சவுரியான் குட்டி வின்சன்சலாஸ் (33 வயது) என்பவர் காயமடைந்தார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த அனைவரும் திரும்பி வந்து சேர்ந்தனர். (ஒ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org